7th July 1962]

(c) The instructions referred to above have been issued by the Board as a temporary measure pending a final decision by the Government on the future mode of appointment to posts hitherto governed by the hereditary principle of appointment of village officers, following the judgment of the Supreme Court holding the principle to be *ultra vires*.

திரு. மீ. கல்யாணசுந்தரம் : அரசாங்கம் எந்தக் கோட்பாடுகளை ஆலோசனை செய்துகொண்டிருக்கிறார்கள்? இந்தப் பரம்பரை பாத்தியதை நீடிக்க வேண்டுமென்பது அரசாங்கத்தின் அபிப்பிராயமா?

கனம் திரு வி. ராமையா : அதெல்லாம் இப்போது பரிசீலனையில் இருக்கிறது. முடிந்தவுடன் தகவல் தருகிறேன்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, is there any proposal under the consideration of the Government to amend the Act suitably so as to safeguard the interests of hereditary system of village officers?

THE HON. SRI V. RAMAIAH : I have to inform the hon. Member that the appointment is liable to be terminated at any time without notice. I have pointed out the difficulty that has arisen consequent on the judgment of the Supreme Court and we are considering measures to find out how we can safeguard it and what we should do. These proposals are under the consideration of the Government and as soon as a decision is taken, it will be communicated.

திரு. மீ. கல்யாணசுந்தரம் : கிராம உத்தியோகஸ்தர்களை நியமிப்பது சம்பந்தமாக அரசாங்கத்தின் கொள்கை ஒருபுறமிருக்க சமீபத்தில் கனம் நிதியமைச்சர் அவர்கள் தமது பட்ஜெட் பிரசங்கத்தில் மற்ற அரசாங்க ஊழியர்களுக்கு 5 ரூபாய் சம்பள உயர்வு ஜூலை 1-ம் தேதியிலிருந்து கொடுப்பதாக அறிவித்தார்களே, அந்த அடிப்படையில் கிராம உத்தியோகஸ்தர்களுக்கும் சம்பள உயர்வு அளிக்கப்படுமா?

கனம் திரு. வி. ராமையா : இந்தக் கேள்வி பாம்பரை பாத்தியதை சம்பந்தமாக உள்ள சிக்கல்களை நீக்க என்னென்ன நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைப்பற்றியது. அது பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னேன். மற்ற விபரங்களுக்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லத் தயாராயிருக்கிறேன்.

சேலம் தொழிற்சாலைத் திட்டம்.

*185 கேள்வி.—**திரு. மு. கருணாநிதி :**
திரு. மீ. கல்யாணசுந்தரம் :
திரு. அ. கு. சுப்பையா : } கனம் கைத்தொழில்

அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலத்தில் உள்ள இரும்புக் கனிகளைக்கொண்டு தொழிற்சாலை நிறுவும் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது?

(இ) இதுபற்றி நிபுணர்களின் ஆராய்ச்சி முடிவு என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) Pilot plant tests are currently in progress in East Germany to study the application of the low shaft furnace process for the production of iron based on Neyveli lignite and Salem ore. We have received information from East Germany that the test is still continuing and that it will take another fortnight more.

(இ) The conclusions of the East German Experts would be available only after the tests are complete. On the basis of certain small-scale tests carried out at National Metallurgical Laboratory, Dr. Nijhawan, the Director of the Laboratory, has expressed the view that the production of iron based on Neyveli lignite and Salem ore would be technically feasible.

திரு. மு. கருணாநிதி: நாலாவது சோதனையில், இயந்திரக் கோளாறு ஏற்பட்டுவிட்டதால் தாமதம் ஏற்பட்டுவிட்டதென்று செய்திகள் வந்திருக்கின்றதே, அந்தக் கோளாறு நீங்கி விட்டதா?

கனம் திரு. ஆர். வெங்கடராமன்: எந்த இடத்தில் கோளாறு என்று அறிய விரும்புகிறேன்.

திரு. மீ. கல்யாணசுந்தரம்: இயந்திரக் கோளாறோ, கோளாறு இல்லையோ சோதனை நடந்து நிச்சயமாக முடியும். இன்னும் சோதனை முடிந்து இறுதி அறிக்கை வரவில்லை என்பதுதான் இறுதியான நிலை என்பது அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து தெரிகிறது. ஆனால் மத்திய அரசாங்க அமைச்சர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தினுசாக இதைப்பற்றிச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள்.

MR. SPEAKER : What is this question? This Minister cannot answer for what the other Ministers have said.

திரு. மீ. கல்யாணசுந்தரம்: **The Hon. Minister is responsible to this House.** டெபனிட்டாகத் தெரியவேண்டுமென்று கேட்கிறேன். அதற்கும், இதற்கும் முரண்பாடு இருக்கிறதா என்று தெரிய கேட்கிறேன். இதுசம்பந்தமாக, ஒவ்வொருவரும் அவரவர்களுக்குத் தோன்றியதைச் சொல்கிறார்களா, இல்லாவிடில் ஆதாரத்தின்மீது சொல்கிறார்களா? சோதனை இன்னும் முடியாத நிலையில் தொழிற்சாலை எங்கே நிறுவப்படும் என்ற பிரச்சினை குறித்து இப்பொழுது சர்ச்சை நடக்கவேண்டிய அவசியம் என்ன?

கனம் திரு. ஆர். வெங்கடராமன்: ஜனநாயக நாட்டில் சர்ச்சையைத் தவிர்க்கவே முடியாது. அதனால் ஓரளவு அவரவர்கள் தாங்கள் எங்கு வைக்கவேண்டுமென்று நினைக்கிறார்களோ அதை சொல்லிக்கொண்டுதான் இருப்பார்கள். அதிகாரப்பூர்வமாக நான் சொன்னது இந்தப் பரிசீலனை எல்லாம் இன்னும் முடியவில்லை, முடிந்தவுடன் அதுகுறித்து முடிவு எடுக்கப்படுமென்பதுதான்.

7th July 1962]

திரு. மு. கருணாநிதி: 'கோக்கிங்', 'ப்ரிக்கட்டிங்', கனிப்பொருள் பக்குவப் படுத்துவதும் இம்மூன்று சோதனைகளும் வெற்றி பெற்ற பிறகு நாலாவதாக கிழக்கு ஜெர்மனியில், இயந்திரத்தில் ஏதோ கோளாறு ஏற்பட்டு விட்டதாக ஆளும் கட்சி சார்புடைய பத்திரிக்கையில் செய்தி வந்திருக்கிறது. அதை கனம் முதல் அமைச்சர் அவர்களிடம் தந்திருக்கிறேன், அதைப்பற்றித்தான் கேட்டேன்.

கனம் திரு. ஆர். வெங்கடராமன்: எனக்குத் தெரிந்த வரையிலே ஆளும் கட்சிக்குப் பத்திரிகை கிடையாது. அறைகுறையாகக் கிடைக்கிற செய்திகளை வைத்துக்கொண்டு செய்திகளைப் பிரசுரம் செய்தால் இன்னும் கூடுதல் பிரதிகள் விற்குமே என்று பல செய்திகள் வெளியிடப்படுகின்றன. நமது ராஜ்யத்தின் பிரதிநிதி ஸி.வி. எஸ். மணி அவர்கள் இப்பொழுது கிழக்கு ஜெர்மனிக்கு போய் இருக்கிறார்கள். அவர்கள் எழுதிய கடைசிக் கடிதத்தில் பரிசீலனை இன்னும் நீடித்து நடக்கும், ஒன்றிரண்டு வாரங்கள் ஆகும் என்றுதான் எழுதியிருக்கிறார்கள்.

திரு. கோ. வெங்கடராமன்: தட்டினால் தங்கம்; வெட்டினால் வெள்ளி, இடித்தால் இரும்பு என்று பேசுகின்ற நிபுணர்கள் ஏதாவது ஆராய்ச்சி நடத்தியிருக்கிறார்களா? அப்படி இருந்தால் அந்த நிபுணர்களின் முடிவு சர்க்காருக்குத் தெரியுமா?

கனம் திரு. ஆர். வெங்கடராமன்: ஆராய்ச்சி செய்கிறவர்கள் அம்மாதிரிப் பேசமாட்டார்கள்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: வடக்கேயிருந்து நல்ல காற்று வீசுவதாக நான் அறிகிறேன். நல்ல காற்று இருக்கிற சமயத்தில் நமது கனம் அமைச்சர் அவர்கள் இந்த இரும்புக் கனியை உபயோகப்படுத்தும் வகையில் தூற்றிக்கொள்வார்களா என்று கேட்க விரும்புகிறேன். (ஆரவாரம்.)

கனம் திரு. ஆர். வெங்கடராமன்: நாங்கள் காற்றைக் கூட உண்டாக்க முடியும். (மேலும் ஆரவாரம்.)

பொறியியல் கல்லூரிகளும் பாலிடெக்னிக்குகளும்

* 186-அ. கேள்வி.—திரு. அ. பெ. தர்மலிங்கம்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அரசினர் பொறியியல் கல்லூரி நிறுவுவதற்கான திட்டமுண்டா? எப்போது?

THE HON. SRI R. VENKATARAMAN: Yes, Sir. In 1963–64.

திரு. கே. ஏ. மதியழகன்: ரீஜினல் என்ஜினியரிங் கல்லூரி சம்பந்தமாக மக்கள் சபையில் 20 நாட்களுக்கு முன்பு "திருச்சியில் ரீஜனல் என்ஜினியரிங் கல்லூரி அமைப்பது சம்பந்தமாகச் சென்னை சர்க்காரை என்னென்ன செய்யவேண்டுமென்பதைப் பற்றி முழு விவரங்கள் கேட்டிருக்கிறோம். அது வந்து சேராததினால்தான் என்ஜினியரிங் கல்லூரி அமைக்கப்படவில்லை"